# TAMIL FILM ACTIVE PRODUCERS ASSOCIATION

REGN NO: SRG/Chennai South/250/2020,
(Registered under Tamil Nadu Societies Act, 1975)

PRESIDENT P. BHARATHIRAJAA | WORKING PRESIDENT T.G. THYAGARAJAN | GENERAL SECRETARY T. SIVA | TREASURER G. DHANANJEYAN



Vice President
S.R. Prabhu

Joint Secretaries
S.S. Lalit Kumar
Suresh Kamatchi

Executive Committee
Mukesh R. Mehta
S. Vinodkumar
K. Rajsekar
Arun Mozhi Manickam
Nitin Sathyaa
R. Rajmohan (a) R. Kannan
P. G. Muthaiah
Kaarthekeyen Santhanam
I. B. Karthikeyan
P. Ranganathan


Ref.No.TFAPA/1015 03.02.2025

திரு. **திருப்பூர் சுப்ரமணியம்**, தலைவர்,
தமிழ்நாடு திரையரங்கு & மல்டிபிளக்ஸ் உரிமையாளர்கள் சங்கம்,
(Tamil Nadu Theatres & Multiplex Owners Association),
திரு.R. **பன்னீர் செல்வம்**, பொது செயலாளர்,
தமிழ்நாடு திரைப்பட கண்காட்சியாளர்கள் சங்கம்,
(Tamil Nadu Film Exhibitors Association),
சென்னை.

பொருள்: சிறு பட்ஜெட் படங்களுக்கு வார நாட்களில் டிக்கெட் கட்டணங்களை குறைத்து, பார்வையாளர்களை அதிகம் வரவழைக்க ஒத்துழைப்பு தர கோரிக்கை.

அன்புடையீர், வணக்கம்.

சிறு பட்ஜெட் திரைப்படங்களுக்கு பார்வையாளர்கள் திரையரங்குகளுக்கு வருவது, குறைவாக இருப்பது மிகவும் கவலைக்குரிய விஷயமாக பார்க்கிறோம். அதுவும் 80 சதவீத திரைப்படங்கள் சிறு பட்ஜெட் படங்களாக இருப்பினும், மிகவும் குறைவான படங்களே திரையரங்குகளில் ஆதரவு பெறுகின்றன. உதாரணமாக, ஜனவரி 2025-ல், வெளியான 26 படங்களில், 22 சிறு பட்ஜெட் படங்கள் தான். அவைகளில் ஒரே ஒரு திரைப்படம் (குடும்பஸ்தன்) மட்டும் தான் திரையரங்குகளில் வெற்றி அடைந்துள்ளது.

இந்த நிலை மாறி, மேலும் பல சிறு பட்ஜெட் படங்கள் வெற்றி பெற, பார்வையாளர்களை கவரும் வகையில், வார நாட்களில் (திங்கள் முதல் வியாழன் வரை), சிறு பட்ஜெட் படங்கள் தமிழகமெங்கும் அதிக பட்சம் ரூபாய் 100 மட்டுமே டிக்கெட் கட்டணமாக (GST & LBET உட்பட), வசூலிக்கபட வேண்டும். சிறு நகரங்களில் இந்த கட்டணம் ரூபாய் 75 ஆக வைத்தால் இந்த முயற்சி மேலும் பலம் பெரும்.

TAMIL FILM ACTIVE PRODUCERS ASSOCIATION CHENNAI 600 006



E2/G, Gemini Parsn Apartments, Old.No.599, New No.448A, Anna salai, Chennai - 600-006. Tamil Nadu, India.
Phone: 044 4859 8989 / Mobile : 95660 64204 / E-Mail: tfapa2020@gmail.com / visit: www.TFAPA.com

Vice President
S.R. Prabhu

Joint Secretaries
S.S. Lalit Kumar
Suresh Kamatchi

Executive Committee
Mukesh R. Mehta
S. Vinodkumar
K. Rajsekar
Arun Mozhi Manickam
Nitin Sathyaa
R. Rajmohan (a) R. Kannan
P. G. Muthaiah
Kaarthekeyen Santhanam
I. B. Karthikeyan
P. Ranganathan


இத்தகைய கட்டண குறைப்பை விளம்பரம் செய்து, முறைப்படி செய்து வந்தால், சிறிது நாட்களுக்கு பிறகு, சிறு பட்ஜெட் படங்களை திரையரங்குகளில் பார்க்கும் எண்ணம் மேலும் பலருக்கு வரும். அதன் மூலம் பல சிறு பட்ஜெட் படங்கள் வெற்றியும் அடைய முடியும்.

வாராவாரம் வெளிவரும் படங்களில் எந்தெந்த படங்களுக்கு இந்த குறைந்த டிக்கெட் கட்டணத்தை வார நாட்களில் வசூலிக்க வேண்டும் என்கிற விபரங்களை ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை தங்களுக்கு தர நாங்கள் தயாராக இருக்கிறோம்.

பிரபல நடிகர்கள் நடித்த படங்களுக்கு தற்போது உள்ள டிக்கெட் முறையில் எந்த மாற்றமும் தேவையில்லை. சிறு பட்ஜெட் படங்கள் மேலும் வெற்றியடைய மட்டுமே இந்த கடிதம் தங்களுக்கு அனுப்புகிறோம்.

எங்களின் இந்த ஆலோசனையை உடனே தாங்கள் கலந்தாலோசித்து நடைமுறைபடுத்துமாறு கேட்டு கொள்கிறோம்.

நன்றியுடன்,

தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர் சங்கம் சார்பில்,

| T.G. தியாகராஜன் | T. சிவா | G. தனஞ்ஜெயன் |
|---|---|---|
| செயல் தலைவர் | பொது செயலாளர் | பொருளாளர் |

TAMIL FILM ACTIVE PRODUCERS ASSOCIATION CHENNAI 600 006




E2/G, Gemini Parsn Apartments, Old.No.599, New No.448A, Anna salai, Chennai - 600-006. Tamil Nadu, India.
Phone: 044 4859 8989 / Mobile : 95660 64204 / E-Mail: tfapa2020@gmail.com / visit: www.TFAPA.com